## நவம்பர் – 10 – சனி

### புனித பெரிய லியோ

**"எனக்கு வலுவூட்டுகிறவரின் துணைகொண்டு எதையும் செய்ய எனக்கு ஆற்றல் உண்டு"(பிலி 4:13)**

### முதல் வாசகம் : பிலிப்பியர் 4 : 10 – 19

சகோதர சகோதரடுகளே! என்னைப்பற்றிய அக்கறை இப்பொழுதாவது மீண்டும் உங்களிடையே எழுந்தது கண்டு ஆண்டவர் அருளால் நான் பெரிதும் மகிழ்கிறேன். நீங்கள் என்னைப்பற்றி அக்கறை கொண்டிருந்தீர்கள் என்பது உண்மைதான். ஆனால் அதைக் காட்டிக்கொள்ளும் வாய்ப்பு உங்களுக்குக் கிடைக்கவில்லை.எனக்கு ஏதோ குறைவாய் இருப்பதால் இவ்வாறு சொல்கிறேன் என நினைக்கவேண்டாம். ஏனெனில் எந்நிலையிலும் மனநிறைவோடு இருக்கக் கற்றுக்கொண்டுள்ளேன். எனக்கு வறுமையிலும் வாழத்தெரியும். வளமையிலும் வாழத்தெரியும். வயிறார உண்ணவோ, பட்டினி கிடக்கவோ, நிறைவோ குறைவோ எதிலும் எந்தச்சூழலிலும் வாழப் பயிற்சி பெற்றிருக்கிறேன்.எனக்கு வலுவூட்டுகிறவரின் துணைகொண்டு எதையும் செய்ய எனக்கு ஆற்றல் உண்டு. ஆயினும் நான் பட்ட துன்பத்தில் நீங்கள் பங்குகொண்டது உங்கள் நன்மனத்தைக் காட்டுகிறது.பிலிப்பியர்களே, நான் நற்செய்தியை அறிவிக்கத் தொடங்கின காலத்தில், மாசிதோனியாவை விட்டுச்சென்றபிறகு, உங்களைத்தவிர வேறெந்தத் திருச்சபையும் என் வரவுசெலவில் பங்கேற்கவில்லை. இதை நீங்களும் அறிவீர்கள். ஏனெனில் நான் தெசலோனிக்காவில் இருந்தபோதுகூட என்தேவையை நிறைவுசெய்ய ஒருமுறை மட்டுமல்ல, இருமுறை உதவி அனுப்பினீர்கள்.நான் உங்கள் நன்கொடைகளை நாடவில்லை. மாறாக, உங்கள் கணக்கில் நற்பயன்கள் பெருகவேண்டும் என்றே விரும்புகிறேன்.நீங்கள் அனுப்பியதெல்லாம் பெற்றுக்கொண்டேன். இப்பொழுது என்னிடம் நிறையவே இருக்கிறது. நீங்கள் அனுப்பியவற்றை எப்பப்பிராதித்துவிடமிருந்து பெற்றுக்கொண்டு நிறைவுற்றிருக்கிறேன். அவை நறுமணம் வீசும் காணிக்கையும் கடவுளுக்கு ஏற்புடைய, உகந்த பலியுமாகும்.என்கடவுள், கிறிஸ்து இயேசுவின் வழியாய்த் தம் ஒப்பற்ற செல்வத்தைக்கொண்டு, உங்கள் தேவைகள் அனைத்தையும் நிறைவு செய்வார்

**பதில்பாடல் :** ஆண்டவருக்கு அஞ்சி நடப்போர் பேறுபெற்றோர்

### நற்செய்தி : லூக்கா 16 : 9 – 15

அக்காலத்தில் இயேசு தம் சீடர்களுக்குக் கூறியதாவது: "நான் உங்களுக்குச் சொல்கிறேன் நேர்மையற்ற செல்வத்தைக்கொண்டு உங்களுக்கு நண்பர்களைத் தேடிக்கொள்ளுங்கள். அது தீரும்பொழுது அவர்கள் உங்களை நிலையான உறைவிடங்களில் ஏற்றுக் கொள்வார்கள்.மிகச் சிறியவற்றில் நம்பத் தகுந்தவர் பெரியவற்றிலும் நம்பத் தகுந்தவராய் இருப்பார். மிகச் சிறியவற்றில் நேர்மையற்றவர் பெரியவற்றிலும் நேர்மையற்றவராய் இருப்பார். நேர்மையற்ற செல்வத்தைக் கையாளுவதில் நீங்கள் நம்பத்தகாதவராய் இருந்தால் யார் உங்களை நம்பி உண்மைச் செல்வத்தை ஒப்படைப்பார்? பிறருக்கு உரியவற்றைக் கையாளுவதில் நீங்கள் நம்பத்தகாதவர்களாய்ப் போனால் உங்களுக்கு உரியவற்றை உங்களுக்குக் கொடுப்பவர் யார்?"எந்த வீட்டு வேலையாளும் இரு தலைவர்களுக்குப் பணிவிடை செய்யமுடியாது ஏனெனில், ஒருவரை வெறுத்து மற்றவரிடம் அவர் அன்பு கொள்வார் அல்லது ஒருவரைச் சார்ந்து கொண்டு மற்றவரைப் புறக்கணிப்பார். நீங்கள் கடவுளுக்கும் செல்வத்துக்கும் பணிவிடை செய்யமுடியாது". பண ஆசைமிக்க பரிசேயர் இவற்றையெல்லாம் கேட்டு இயேசுவை ஏளனம் செய்தனர்.அவர் அவர்களிடம் கூறியது. "நீங்கள் உங்களை மக்கள்முன் நேர்மையாளராகக் காட்டிக்கொள்கிறீர்கள். கடவுள் உங்கள் உள்ளங்களை அறிவார். நீங்கள் உங்களை மக்கள்முன் உயர்ந்தவர்களாகக் காட்டிக்கொள்வது கடவுள் பார்வையில் அருவருப்பாகும்" என்றார்.

**தியானம்:** யேசுவின் துண கொண்டு நாம் நடக்கும் போது எதற்கும் பயப்படத் தேவை இல்லை. இதனை இன்றைய முதல் வாசகத்தில் பவுல் வெளிப்படுத்துகின்றார். மனமாற்றம் பெற்றபின் அவர் எதற்கும், யாருக்கும் பயப்படவில்லை. துணிவாக இறை அரசை அறிவித்தார். பசியோ தாகமோ எதனாலும் பாதிக்கப்படவில்லை. ஆனால் இன்றைய நற்செய்தி எம்மை சற்றே குழப்பத்தில் ஆழ்த்தலாம். நேர்மையற்ற செல்வத்தைக் கொண்டு நண்பர்களை தேடிக் கொள்ளுங்கள் என்கிறார் யேசு. இதற்கு நாம் நற்செய்திக்கு முன்னுள்ள பகுதியை வாசித்தால் அதன் அர்த்தம் புரியும். வேலை இழக்க இருக்கும் தலைவர் மற்றவர்கள் தம்மை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக தமது தலைவருக்கு எதிராக, ஆனால் மக்களுக்கு சார்பாக நடந்து கொள்கின்றார். கடன் பட்டவர்களின் கடன் பாதியாக குறைக்கப் பட்டால் கடன் பட்டவர் நிற்சயம் மகிழ்வார், அதனால் அவருக்கு நன்றிக் கடன் பட்டிருப்பார். இதனையே அந்த தலைவர் செய்தார். நேற்மையற்ற வழியில் வந்த உறவுகள் நேர்மையற்ற வழியில்தான் எம்மை கொண்டு செல்ல உதவுவார்கள். அதற்காக நம்மை நேற்மையற்ற வழியில் வாழ சொல்லவில்லை. இன்று பலர் நேற்மையற்ற வழியில் பணம் சம்பாதிக்கின்றார்கள். அதனை ஆடம்பர, சுக போக வாழ்விற்காக செலவிடுகின்றார்கள். ஆனால் இது நிலையாக நிற்குமா? இல்லை. என்றோ ஒருநாள் அது அழிவில் கொண்டுபோய் எம்மை நிறுத்தும். அப்போது நாம் கவலைப் பட்டு பிரயோசனம் இல்லை. பணத்தின் மேல் நாம் பற்று வைத்தோம் என்றால் நம்மால் கடவுளை முழு மனதுடன் அன்பு செய்யவோ, ஏற்றுக்கொள்ளவோ முடியாது. நிறைவான வாழ்வு பணத்திலோ, ஆடம்பர வாழ்விலோ இல்லை. அது ஒவ்வொருவர் உள்ளங்களில் உள்ளது. பாய்விரித்து படுப்பவனும் வாய் திறந்து தூங்குகின்றான், பஞ்சணையில் நான் படுத்தும் நெஞ்சில் ஓர் அமைதி இல்லை என்ற கவி வரிகளுக்கு நாம் சொந்தம் ஆகிவிடக் கூடாது.